# சென்னை சர்வதேச விமான நிலையத்தை நவீனமயமாக்கப் போவது எப்போது?

## மக்களவையில் – தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 26-

சென்னை சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்துவதற்காக நடைபெற்றுவரும் பணிகள் தாமதமாவதற்கான காரணங்கள் என்ன என்றும் நிறுத்தப்பட்ட சேவைகளை மீண்டும் தொடங்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன என்றும் நாடாளுமன்றத்தில் விமானப் போக்குவரத்துத் துறைஅமைச்சர் கிஞ்சராபு ராம்மோகன் அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் வருமாறு:

இந்தியாவின் மிகப் பழமையான மற்றும் அதிக பயணிகள் போக்குவரத்து கொண்ட விமான நிலையங்களில் ஒன்றாக விளங்கும் சென்னை சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் எண்ணிக்கை மற்றும் தேசிய அளவிலான தரவரிசை கடந்த சில ஆண்டுகளில் குறைந்து வருவதற்கான காரணங்கள் என்ன? அதுகுறித்து ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதின் விவரங்கள் என்ன?

கடந்த ஐந்து ஆண்டுகளில் சென்னை சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் கையாளும் திறனை அதிகரித்தல், பயணிகள் வசதிகளை மேம்படுத்துதல், விமான நிலைய உள்கட்டமைப்பை நவீன மயமாக்குதல் மற்றும் ஓடுபாதை நெரிசலைக் குறைத்தல் ஆகிய நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் என்ன? அவற்றிற்காக செலவிடப்பட்ட நிதி மற்றும் திட்டங்களின் தற்போதைய நிலை விவரங்கள் என்ன?

விமான வழித்தடங்கள் ரத்து செய்யப்படுதல், விமான இயக்கத்திற்கான கால இடைவெளி (slot) கிடைப்பதில் உள்ள பற்றாக்குறை மற்றும் உள்கட்டமைப்புச் சிக்கல்கள் ஆகியவை சென்னையின் உள்நாட்டு மற்றும் சர்வதேசவிமான இணைப்பில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பை அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வாறாயின் நிறுத்தப்பட்ட சேவைகளை மீண்டும் தொடங்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

சென்னை சர்வதேச விமான நிலையத்தில் தற்போது நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த முனைய (Integrated Terminal) விரிவாக்கத் திட்டம் மற்றும் ஓடுபாதைக்கு (Runway) இணையாகச் செல்லும் பிரத்யேகப் பாதையான டாக்ஸிவே (Parallel Taxiway) திட்டங்களை நிறைவு செய்வதில் ஏற்படும் கால தாமதத்திற்கான காரணங்கள் மற்றும் அவற்றை நிறைவு செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடு என்ன?

தமிழ்நாட்டின் முக்கிய விமானப் போக்குவரத்து நுழைவாயிலாக விளங்கும் சென்னை சர்வதேச விமான நிலையம், போதுமான உள்கட்டமைப்பு மற்றும் திறன் மேம்பாட்டின் மூலம் பயணிகள், விமான சேவைகள் மற்றும் முதலீடுகளை பிற பெருநகர விமான நிலையங்களிடம் இழக்காமல், எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும், உலகத் தரத்தில் போட்டித்தன்மையுடன் செயல்படும் வகையிலும் உருவாக்க ஒன்றிய அரசு வகுத்துள்ள நீண்டகால செயல் திட்டம் மற்றும் கொள்கை என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

திருவண்ணாமலை மாநகர நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில், முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் உரையாற்றினார். உடன் கழக மருத்துவஅணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா. ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா விஜயரங்கன், ஏ.ஏ.ஆறுமுகம், சு.விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், சி.சண்முகம், பா.ஷெரீப், மு.கருணாமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

### தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் துவக்கி வைத்தார்!

# தொலைத் தொடர்பு ஊழியர் முன்னேற்றச் சங்க 6-வது மாநில மாநாடு!

## கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

சென்னை, ஜூலை 26-

சென்னைத் தொலைபேசி, தொலைத்தொடர்பு ஊழியர் முன்னேற்றச் சங்கம் மற்றும் தொலைத்தொடர்பு ஓய்வூதியர் முன்னேற்றச் சங்கத்தின் 6வது மாநில மாநாடு நேற்று (25.07.2026 சனிக்கிழமை) காலை 10 மணியளவில் தொ.மு.ச. பேரவை, கலைஞரகம், நெ.25, தியாகராய தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை-17-ல் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அரங்கத்தில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற மக்களவை உறுப்பினருமான ஆ.இராசா சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளரும், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான மு.சண்முகம் அவர்கள் மாநாட்டை துவக்கி வைத்தார்.

மேலும் மாநாட்டில் தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன், தொ.மு.ச. பேரவைப் பொருளாளர் கோ.சி.வள்ளுவன் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விழாவிற்கு தொ.மு.ச. பேரவை இணைப் பொதுச் செயலாளரும், சென்னை தொலைபேசி தொ.மு.ச. வின் மாநில செயலாளருமான ஜெ.விஜயகுமார் தலைமையேற்றார். ஓய்வூதியர் தொ.மு.ச. மாநில செயலாளர் டி.தேவராஜ் வரவேற்புரையாற்றினார்.

### விவசாயிகளுக்கு மலிவு விலையில் உரம் வழங்கப்பட்டுள்ளதா?

# தமிழ்நாட்டில் உர விநியோகத்தின் நிலை என்ன?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 26-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், ஜூலை 24, 2026 அன்று மக்களவையில், சர்வதேச சந்தையில் பாஸ்பேட்டிக் உரங்களின் விலை உயர்வு, டி.ஏ.பி. உரத்தின் போதிய கிடைப்புத் தன்மை, விவசாயிகளுக்கு மலிவு விலையில் உரம் வழங்குதல், இறக்குமதி ஏற்பாடுகள் மற்றும் தமிழ்நாட்டில் உர விநியோக நிலை குறித்து கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் வேதிப்பொருட்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் ஜகத் பிரகாஷ் நட்டா அளித்த பதில் பின் வருமாறு:

பாஸ்பேட்டிக் மற்றும் பொட்டாசிக் உரங்களுக்கு 2010 ஏப்ரல் 1 முதல் ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டம் நடைமுறையில் இருப்பதாகவும், இதன் கீழ் உரங்களின் அதிகபட்ச சில்லறை விலையை நிறுவனங்கள் நிர்ணயித்தாலும், சர்வதேச சந்தையில் உரங்கள் மற்றும் மூலப்பொருட்களின் விலை மாற்றங்கள், நாட்டின் ஊட்டச்சத்து தேவை, சமச்சீர் உரப் பயன்பாடு, மானியச் சுமை மற்றும் உரங்களின் விலையை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு மானிய விகிதங்களை ஆண்டுதோறும் அல்லது அரையாண்டுதோறும் நிர்ணயித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இந்தத் திட்டம் தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் எந்தப் பிராந்திய வேறுபாடுமின்றி ஒரே மாதிரியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

விவசாயிகளுக்கு 50 கிலோ டி.ஏ.பி. உர மூட்டை ரூ.1,350 என்ற மலிவு விலையில் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்ய, ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத்துடன் கூடுதலாக டன் ஒன்றுக்கு 3,500 சிறப்பு உதவி வழங்கப்பட்டு வருவதாகவும், இதில் தொழிற்சாலையிலிருந்து விவசாயி வரை ஏற்படும் செலவுகள், சர்வதேச விலை உயர்வு அல்லது சரிவால் ஏற்படும் தாக்கம், அதிகபட்ச சில்லறை விலையில் உள்ள சரக்கு மற்றும் சேவை வரிக் கூறு, நிகர அதிகபட்ச சில்லறை விலையில் 4 சதவீத நியாயமான வருவாய் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், 2025-26 ரபி மற்றும் கரீப் பருவங்களிலும், 2026 கரீப் பருவத்திலும், ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத்திற்கு கூடுதலாக, இறக்குமதி செய்யப்பட்ட டி.ஏ.பி., உள்நாட்டில் தயாரிக்கப்படும் டி.ஏ.பி. மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட டி.எஸ்.பி. உரங்களுக்கும் இந்தச் சிறப்பு உதவி வழங்கப்பட்டு வருவதாகவும் கூறினார். 2026 கரீப் பருவத்தில் பாஸ்பேட்டிக் மற்றும் பொட்டாசிக் உரங்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்காக, ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டத்தின் கீழ் 41,533.81 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இது 202526 ரபி பருவத்திற்கான பட்ஜெட் தேவையை விட சுமார் 3,581 கோடி அதிகமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஒவ்வொரு சாகுபடிப் பருவமும் தொடங்குவதற்கு முன்பு மாநில அரசுகளுடன் ஆலோசித்து மாநில வாரியாகவும், மாதவாரியாகவும் உரத் தேவையை மதிப்பீடு செய்து, அதன்படி மாநிலங்களுக்கு மாதாந்திர உர ஒதுக்கீடு வழங்கப்படுவதாகவும், ஒருங்கிணைந்த உரக் கண்காணிப்பு முறை மூலம் மானிய உரங்களின் நகர்வு நாடு முழுவதும் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மேலும், மாநில வேளாண் அதிகாரிகளுடன் வாரந்தோறும் காணொலி ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி தேவையான திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறினார்.

தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக உரங்களின் இருப்பு மற்றும் விநியோகம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, உர உற்பத்தி நிறுவனங்கள், உர விநியோக நிறு வனங்கள் ஆகியவற்றுடன் தொடர்ந்து ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டு கூட்டுறவு மற்றும் தனியார் சில்லறை விற்பனை நிலையங்களில் போதுமான அளவு உரம் இருப்பதை உறுதி செய்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் மாவட்ட அமலாக்க அதிகாரிகளுடன் தொடர்ந்து ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாகவும், உற்பத்தி, இறக்குமதி, போக்குவரத்து மற்றும் விநியோகம் தொடர்பாக அவ்வப்போது ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, பற்றாக்குறை அல்லது தாமதம் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கூடுதல் விநியோகம் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

2025-26 ரபி பருவம் மற்றும் 2026 கரீப் பருவத்தில் (2026 ஏப்ரல் 1 முதல் ஜூலை 19 வரை) தமிழ்நாட்டில் டி.ஏ.பி. உரம் போதுமான அளவில் கிடைத்துள்ளதாகவும், 2026 கரீப் பருவத்தில் 73,806 மெட்ரிக் டன் தேவை இருந்த நிலையில் 97,850 மெட்ரிக் டன் கிடைக்கப்பெற்று, 54,870 மெட்ரிக் டன் விற்பனையாகி, 42,960 மெட்ரிக் டன் இறுதி இருப்பு இருந்ததாகவும், 202526 ரபி பருவத்தில் 1,55,000 மெட்ரிக் டன் தேவைக்கு எதிராக 2,16,400 மெட்ரிக் டன் கிடைக்கப்பெற்று, 1,59,800 மெட்ரிக் டன் விற்பனையாகி, 56,600 மெட்ரிக் டன் இறுதி இருப்பு இருந்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், டி.ஏ.பி. மற்றும் பிற பாஸ்பேட்டிக் உரங்களின் விநியோகத்தை வலுப்படுத்த இந்திய உர நிறுவனங்களுக்கும் சவுதி அரேபிய நிறு வனங்களுக்கும் ஆண்டுதோறும் சுமார் 31 லட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி. வழங்குவதற்கான நீண்டகால ஒப்பந்தங்களும், ரஷ்ய நிறுவனங்களுடன் சுமார் 26.50 லட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி./என்.பி.கே. உரங்களை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார். தமிழ்நாட்டில் கோதுமை மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடி குறிப்பிடத்தக்க அளவில் இல்லாததால், பாஸ்பேட்டிக் உரங்களின் கிடைப்புத் தன்மை நெல், மக்காச்சோளம், கரும்பு, பருத்தி, பயறு, எண்ணெய் வித்துக்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சிக்கும் விளைச்சல் அதிகரிப்பிற்கும் முக்கிய பங்காற்றி வருவதாக ஒன்றிய அரசின் வேதிப்பொருட்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் ஜகத் பிரகாஷ் நட்டா, தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

### சேமிப்பு – போக்குவரத்து – கையாளுதல் போன்றவற்றில்

# அமோனியா இரசாயனங்களின் நடைமுறைகள் என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வினா!

புதுடெல்லி, ஜூலை 26-

தமிழ்நாட்டின் திருவள்ளூரில் ஏற்பட்ட அமோனியா வாயு கசிவு சம்பவத்தைத் தொடர்ந்து, அமோனியா மற்றும் பிற அபாயகரமான இரசாயனங்களின் சேமிப்பு, போக்குவரத்து மற்றும் கையாளுதல் தொடர்பான பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை இணை அமைச்சர் திருமதி. அனுப்ரியா படேல் அவர்கள் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிச்சூழல் நிபந்தனைகள் சட்டத் தொகுப்பு (OSH&WC Code), 2020 21.11.2025 முதல் அமலுக்கு வந்துள்ளதாகவும், தொழிற்சாலைகள் உட்பட அனைத்து நிறுவனங்களிலும் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்வதற்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், தொழிற்சாலைகளில் இந்தச் சட்டத்தை அமல்படுத்துவது சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் பொறுப்பு என்றும் குறிப்பிட்டார்.

மேலும், தமிழ்நாடு தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகத்தின் தகவலின்படி, அமோனியா கையாளும் தொழிற்சாலைகளில் சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அபாயகரமான இரசாயனங்கள் கையாளப்படும் அல்லது சேமிக்கப்படும் பகுதிகளில் தொழிலாளர்கள் தங்க அனுமதிக்கக் கூடாது என அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், இதனை கண்காணிக்க சிறப்பு கண்காணிப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

### உயிர்காக்கும் மருந்துகளுக்கான

# ஜி.எஸ்.டி.வரியை குறைக்கத் திட்டம் உள்ளதா?

## மாநிலங்களவையில் – இரா. கிரிராஜன் கேள்வி !

புதுடெல்லி, ஜூலை 26-

உயிர்காக்கும் மருந்துகளுக்கான ஜி.எஸ்.டி. வரியை குறைக்கும் திட்டம் உள்ளதா என நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசிடன் தி.மு.க. எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.

நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் ஜூலை 20ஆம் தேதி தொடங்கி நடந்துவரும் நிலையில், அதில் கலந்து கொண்டுள்ள தி.மு.க. எம்.பி. இரா. கிரிராஜன், உயிர் காக்கும் மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்கான ஜி.எஸ்.டி. வரியை குறைப்பது குறித்து ஒன்றிய அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றிய அரசின் நிதி அமைச்சரிடம், தமிழ்நாட்டில் உள்ள வர்த்தகர்கள்,

உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் சேவைத் துறையினரிடமிருந்து, தற்போதுள்ள ஜி.எஸ்.டி. வரியை குறைக்குமாறு அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா? குறிப்பிட்ட சேவைப் பொருட்களின் ஜி.எஸ்.டி. வரியை குறைக்கும் படி அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா? உயிர்காக்கும் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், ஆய்வக உபகரணங்கள், ஸ்டென்ட்கள் உள்ளிட்ட அறுவை சிகிச்சைக் கருவிகளுக்கான ஜி.எஸ்.டி. வரி விகிதங்களைக் குறைக்க அரசாங்கத்திற்கு ஏதேனும் திட்டங்கள் உள்ளவா போன்ற கேள்விகளை தி.மு.க. எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் சௌத்ரி, தமிழ்நாட்டில் உள்ள வர்த்தகர்கள், உற்பத்தி நிறுவனங்கள், சேவைத் துறையினரிட மிருந்து, உயிர்காக்கும் மருந்துகள், உபகரணங்கள் மற்றும் சேவைப் பொருட்களுக்கான ஜி.எஸ்.டி. விகிதங்களைக் குறைப்பது தொடர்பாக எந்தவொரு கோரிக்கையும் பெறப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஜி.எஸ்.டி. கவுன்சிலின் பரிந்துரைகளின் அடிப்படையில், கடந்த ஆண்டு செப்டம்பர் 3 ஆம் தேதி நடைபெற்ற 56வது கூட்டத்தில், சுகாதாரத் துறையில் ஜி.எஸ்.டி. விகிதங்களை விரிவாக முறைப்படுத்தும் நோக்கில், குறிப்பிடப்பட்ட 36 உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களுக்கு 5 அல்லது 12 சதவீதமாக இருந்த ஜி.எஸ்.டி. வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு, பூஜ்ஜியமாகக குறைக்கப்பட்டுள்ளதாகவும், மற்ற அனைத்து மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களுக்கும் 5 சதவீதம் என்ற ஜி.எஸ்.டி. வரி விகிதம் பொருந்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர் காக்கும் மருத்துவம் தவிர பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, பல் மருத்துவம், கால்நடை மருத்துவம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் மருத்துவ சாதனங்கள், கருவிகள், உபகரணங்கள் மீதான ஜி.எஸ்.டி. கவுன்சில் முறைப்படுத்தியுள்ளதன் அடிப்படையில், விலக்கு அளிக்கப்படாத பொருட்களுக்கு 5 சதவீதம் மட்டுமே சலுகை அடிப்படையிலான ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படுவதாகவும், தி.மு.க. எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு மத்திய அரசு பதிலளித்துள்ளது.

### விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறி!

# சினிமா வியாபாரம் பார்க்கும் சுயநலக் கோழைகள்!

## தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!

சென்னை, ஜூலை 26-

விவசாயிகளின் வாழ்வாதாரம், போதிய நீர் இல்லாததால் கேள்விக்குறியாக இருக்கும் இந்த நேரத்தில் முதலமைச்சரும், தொடர்புடைய அமைச்சர்களும் 'ஜனநாயகன்' திரைப்படத்திற்கு விளம்பரம் தேடும் சுயநலக் கோழைகளாக இருப்பதாக தி.மு.கழக ஐ.டி. விங் விமர்சித்துள்ளது.

தி.மு.க. ஐ.டி.விங் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அப்பட்டமாக மீறி, தமிழகத்திற்குச் சேர வேண்டிய காவிரி நீரைத் தர மறுக்கும் கர்நாடக அரசின் அடாவடித்தனத்தால், ஜூன் மாதம் வர வேண்டிய 9.19 TMC நீரில் கிடைத்ததோ வெறும் 2.915 TMC தான். ஜூலை மாதம் வர வேண்டிய 31.24 TMC க்கு பதிலாகக் கர்நாடகா தந்ததோ வெறும் 0.459 TMC தான்.

| MONTH | ORDER | ACTUAL FLOWS REALIZED AT BILIGUNDULU (IN TMC) | | |
|---|---|---|---|---|
| | | WATER YEAR 2024-25 | WATER YEAR 2025-26 | WATER YEAR 2026-27 (UPTO 16/07/2026) |
| June | 9.19 | 2.252 | 42.256 | 2.915 |
| July | 31.24 | 96.537 | 103.514 | 0.459* |
| August | 45.95 | 78.393 | 51.943 | – |
| September | 36.76 | 27.613 | 40.790 | – |
| October | 20.22 | 39.711 | 53.477 | – |
| November | 13.78 | 19.823 | 17.497 | – |
| December | 7.35 | 18.480 | 7.603 | – |
| January | 2.76 | 3.538 | 2.687 | – |
| February | 2.50 | 2.041 | 2.226 | – |
| March | 2.50 | 3.064 | 2.450 | – |
| April | 2.50 | 4.330 | 2.674 | – |
| May | 2.50 | 9.830 | 3.101 | – |
| TOTAL | 177.25 | 305.612 | 330.418 | 3.374* |

The actual flows for Water Year 2024-25 and 2025-26 have exceeded the stipulated orders in most months. The data for 2026-27 is upto 16th July 2026.
*Upto 16/07/2026

டெல்டா விவசாயிகள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில், தமிழ்நாட்டின் உரிமையைக் கேட்க வேண்டிய முதலமைச்சர் விஜய்யும், நீர்வளத் துறை அமைச்சர் ஆனந்தும், விவசாயத் துறை அமைச்சர் வினோத்தும், தங்கள் ஆட்சியை காக்க கூட்டணியில் உள்ளார்கள் என்ற காரணத்தாலும், தங்கள் சீட்டை பாதுகாக்கவும், கர்நாடக காங்கிரஸ் அரசை எதிர்த்துக் கேள்வி கேட்கத் துணிவில்லாமல் பொம்மை போலப் பதுங்குகிறார்கள்!

காவிரி உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டிய இந்த மூன்று அமைச்சர்களும், முதலமைச்சரும் தங்கள் 'ஜனநாயகன்' திரைப்படத்தைத் தியேட்டர்களில் உட்கார்ந்து ரசிப்பதிலும், படத்திற்குப் ப்ரோமோஷன் தேடுவதிலுமே பிஸியாக இருக்கிறார்கள்!

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.